**செய்தி வெளியீடு எண் :1343** **நாள் : 06.08.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவுப்படி, மகளிர் இலவசமாக பயணம் செய்யும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளுக்கு பிங்க் வண்ணம் தீட்டப்பட்ட 50 பிங்க் பேருந்துகள் இயக்கத்தையும், சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்து ஐந்து புதிய வழித்தடங்களில் 10 சிற்றுந்துகள் இயக்கத்தையும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் தலைமையில், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று (06.08.2022) கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (06.08.2022), சென்னை, மெரினா கடற்கரை, அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்தில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் தலைமையில், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மகளிர் இலவசமாக பயணம் செய்யும் சாதாரண கட்டணப் பேருந்துகளை எளிதில் தெரிந்து கொள்ள ஏதுவாக, பிங்க் வண்ணம் தீட்டப்பட்ட 50 பிங்க் பேருந்துகள் இயக்கத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

மகளிர் எளிதாக தெரிந்து கொள்ள ஏதுவாக, இனிவரும் காலங்களில், மற்ற மாவட்டங்களில் இயக்கப்படும் சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளுக்கும், பிங்க் வண்ணம் தீட்டப்பட்டு இயக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து, அண்ணாசாலை, ஓமந்தூரார் மருத்துவமனை மெட்ரோ இரயில் நிலைய வளாகத்திலிருந்து, மெட்ரோ இரயில் நிலையங்களிலிருந்து சென்னையின் முக்கிய இடங்களுக்கு ஐந்து புதிய வழித்தடங்களில் 10 இணைப்பு சிற்றுந்துகள் இயக்கத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடி அசைத்து தொடங்கி வைத்தார்கள்.

புதிய வழித்தட சிற்றுந்துகள் விவரம் பின்வாருமாறு

| வ. எண் | தடம் எண். | புறப்படும் இடம் | சேருமிடம் | செல்லும் மார்க்கம் | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | S96 | அரசினர் தோட்டம் மெட்ரோ | தலைமைச் செயலகம் | வாலாஜா சாலை, திருவல்லிக்கேணி, மாநிலக் கல்லூரி, எழிலகம், சென்னை பல்கலைக்கழகம் | 2 |

| வ. எண் | தடம் எண். | புறப்படும் இடம் | சேருமிடம் | செல்லும் மார்க்கம் | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 2 | S97 | கிண்டி மெட்ரோ | வேளச்சேரி விஜயநகர் பே.நி | செல்லம்மாள் கல்லூரி, கிண்டி ரேஸ் கோர்ஸ், குருநானக் கல்லூரி, வேளச்சேரி | 2 |
| 3 | S98 | சின்னமலை மெட்ரோ | தரமணி | சைதாப்பேட்டை நீதிமன்றம், மத்திய கைலாஷ், டைடில் பார்க், | 2 |
| 4 | S99 | செனாய் நகர் மெட்ரோ | தி.நகர். பே.நி | அமைந்தகரை மார்கட், மேத்தா நகர், லயோலா கல்லூரி, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர் | 2 |
| 5 | S100 | விமான நிலையம் மெட்ரோ | தாம்பரம் மேற்கு | பல்லாவரம், குரோம்பேட்டை, சிட்லபாக்கம், பூண்டி கடைவீதி, தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு | 2 |
| | | | **மொத்தம்** | | **10** |

இந்நிகழ்வின் போது, போக்குவரத்துத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால்,இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிர்வாக இயக்குநர் திரு.எம்.ஏ.சித்திக்,இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.அ.அன்பு ஆபிரகாம் மற்றும் சென்னை மாநகராட்சி 9–வது மண்டல குழு தலைவர் திரு.மதன்மோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**மேலாண் இயக்குநர்**
**மாநகர் போக்குவரத்துக் கழகம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in